# இலங்கை ஜனாதிபதித் தேர்தல்களும் வாக்களிக்கப்பட்ட முறையும்
## 2005 நவம்பர் 17

இது இலங்கையின் 5வது ஜனாதிபதித் தேர்தல். இத்தேர்தலுக்கு முன்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் பிளவு ஏற்பட்டு பல நூற்றுக்கணக்கான போராளிகள் கொல்லப்பட்டு இருந்தனர். இத்தேர்தல் நடைபெறுவதற்கு ஓராண்டுக்கு உள்ளாக சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு இருந்தனர். இந்த மனித அவலத்திற்குப் பின்னும் தமிழர்களுடைய பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட முடியவில்லை. ஒஸ்லோ உடன்படிக்கை பேச்சுவார்த்தைகள் செயலற்று இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சார்பில் மகிந்த ராஜபக்சவும் போட்டியிட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்காலத்தை நிர்ணயித்த தேர்தல் இது.

| மாவட்டம் | ஐதேக | சுக | அ. வாக்குகள் | மொ. வாக்குகள் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 5523<br>70.20% | 1967<br>25.00% | 8524<br>1.21% | 701938 |
| வன்னி | 65798<br>77.89% | 17197<br>20.36% | 85874<br>34.30% | 250386 |
| மட்டக்களப்பு | 121514<br>79.51% | 28836<br>18.87% | 154615<br>48.51% | 318728 |
| திகாமடுல்ல | 159198<br>55.81% | 122329<br>42.88% | 288208<br>72.70% | 396453 |
| திருகோணமலை | 92197<br>61.33% | 55680<br>37.04% | 152428<br>63.84% | 238755 |
| இலங்கை முழுவதும் | 4,706,366<br>48.43% | 4,887,152<br>50.29% | 9,826,778<br>73.73% | 13,327,160 |